R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
January 2020



வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையாரின் ஒரு நாள் விசேஷகூட்டம்
தமிழக கிறிஸ்துவின் சபை ஊழியர்களும் WEBS மாணவர்களும் கலந்து கொண்டனர்.
சகோதரர் P.R.Swamy அவர்கள் செய்திகொடுத்தார்கள்.

Cell : 94435 58041
6379350509
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**
Every Monday 6.00 P.M on Tamilan TV &
Every Saturday 8.00 P.M on Nambikkai TV
YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 20 ஜனவரி 2020 கனி 2




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்




## வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

**பாடம்** : 2
**தலைப்பு** : ஜீவவழி - The Way of Life
**வேத வாசிப்பு** : நீதி.6:20-29

| | |
|---|---|
| 1. போதக சிட்சை ஜீவவழி | - நீதி.6:23 |
| (எ.கா) பரிசேயரிலும் சதுசேயரிலும் | - மத்.3:7-10 |
| 2. புத்திமதிகளைக் காத்துக்கொள் | - நீதி.10:17 |
| (எ.கா) என்னை ஆண்டவரே! | - லூக்.6:46-49 |
| 3. விவேகிக்கு ஜீவவழியானது | - நீதி.15:24 |
| (எ.கா) அன்றியும் சிலுவையில் | - லூக்.23:39-43 |
| 4. உங்கள் முன்னே ஜீவவழி | - எரே.21:8 |
| (எ.கா) இடது - நித்திய ஆக்கினை | - மத்.25:46 |





the word of christ
இருபத்தி நான்கு மணிநேரமும்
உலகமெங்கும்
YouTube
வழியாக
பார்த்து சத்தியத்தை
அறிந்துகொள்ளுங்கள்
தொடர்புக்கு
9443558041
6379350509



THE WORD OF CHRIST
Monthly Magazine
Editor
B.ARJUNAN

திி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 233

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. ஆவியில் எளிமையுள்ளவர்கள் எப்படிப்பட்டவர்கள்?
2. உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு கர்த்தர் எதை வழங்காதிரார்?
3. புறம்பேயிருந்து மனுஷருக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்துமா?
4. புத்திமானுடைய இருதயத்தில் எது தங்கும்?
5. உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு; நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுவது சரியா?
6. ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியில் இருக்கிறானா?
7. நான் ஏற்றுக்கொள்கிற சாட்சி மனுஷருடைய சாட்சியல்ல என்றவர் யார்?
8. எந்த ராஜாவுடைய விண்ணப்பத்தைக் கர்த்தர் கேட்டு அவன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டினார்?
9. இயேசுவானவர் பாடுபட்டபின்பு அப்போஸ்தலருக்கு எத்தனை நாளளவும் தரிசனமானார்?
10. இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறவர் எவர்?

## வேதாகம ஆய்வு... 12



ஆசா - Asa

1. ஆசா என்றால் வைத்தியன் என்று அர்த்தம்.
2. யூதாவின் மூன்றாம் ராஜா.
3. இவன் தேசத்திலுள்ள அருவருப்புகளையெல்லாம் அகற்றினான் – 2 நாளா.15:8
4. கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்தான் – 1இரா.15:11
5. கேபாவையும் மிஸ்பாவையும் கட்டினான் – 1இரா.15:22
6. வியாதிகண்டு கர்த்தரையல்ல பரிகாரிகளையே தேடினான் – 2நாளா.16:12
7. 41 வருஷம் அரசாண்டான் – 2நாளா.16:13

சிறுவர் பகுதி

## கொடுங்கள்

**வேதபகுதி:யோவான் 6:7-9**



**எ**தைக்கொடுப்பது, என்னத்தைக் கொடுப்பது என்று கேட்கிறீர்களா? உங்களிடத்தில் உள்ளதை மனமுவந்து கொடுங்கள். நாங்கள் சிறுபிள்ளைகள் ஆயிற்றே எங்களிடம் என்ன இருக்கும். நாங்கள் சம்பாதிக்கிற வயதில் இல்லையே என்று நீங்கள் நினைக்கக்கூடும். உங்களுக்கு சம்பாத்தியம் இல்லை ஆகையால் வருமானம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. நீங்கள் பள்ளிக்கு செல்லும் பிள்ளைகளாக இருப்பதால் அம்மா, அப்பா அல்லது அண்ணன், அக்கா, மற்றும் உறவினர்கள் உங்களுடைய செலவுக்காக கொஞ்ச பணத்தைக் கொடுக்கிறார்கள். அதை நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அது என்னுடையது அதை என் இஷ்டப்படி செலவு செய்வேன். யாரும் என்னைக்கேட்க முடியாது என்று சொல்லுகிறீர்களா? உங்கள் இஷ்டப்படி செலவு செய்யலாம். ஆனால் அந்த செலவு சரியானபடி இருக்கவேண்டும். தவறான சிநேகிதர்களோடே சேர்ந்துகொண்டு தவறான பழக்க வழக்கங்களுக்கு அந்த பணத்தை செலவு செய்யக்கூடாது.

உங்களுக்கு கிடைத்திருக்கும் அந்த பணத்தை முடியாதவர்களுக்கு கொடுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நான் யாருக்கும் கொடுக்கமாட்டேன் என்று அடம்பிடிக்கக்கூடாது. ஒரு முறை வனாந்தரமான இடத்தில் அநேகர் இயேசுவின் போதனையை கேட்டுக்கொண்டிருந்தனர். நாட்கள் போவதைக்கூட அவர்கள் கவனிக்கவில்லை. அந்த அளவு இயேசு ஆண்டவருடைய போதனையினால் ஈர்க்கப்பட்டவர்களாக அதைக் கேட்டுக்கொண்டிருந்தனர். பின்பு இயேசு அவர்களை அனுப்பி விடுகையில் சோர்ந்துபோவார்களே என்று அறிந்து அவர்களுக்கு அப்பங்களை கொடுக்கும்படி கட்டளையிட்டார். அப்பொழுது "பிலிப்பு அவருக்கு பிரதியுத்தரமாக; இவர்களில் ஒவ்வொருவனும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக்கொண்டாலும், இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே என்றான். அப்பொழுது அவருடைய சீஷரிலொருவனும், சீமோன் பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா அவரை நோக்கி: இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான்" (யோவா.6:7-9).

அந்த ஐந்து வாற்கோதுமை அப்பத்தையும் இரண்டு மீன்களையும் அந்த பையன் கொடுத்தான் அதை ஆண்டவர் ஆசீர்வதித்துக்கொடுத்தார். எல்லாரும் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள். அந்தப் பையன் எனக்கு உள்ள அப்பத்தையும் மீனையும் நான் யாருக்கும் கொடுக்கமாட்டேன் என்று சொன்னானா? அப்படி சொல்லவில்லையே உடனே அதைக் கொடுத்தான். ஐயாயிரம் போருக்கு மேலாக சாப்பிட்ட ஒருவரில், இவனும் திருப்தியாக சாப்பிட்டிருப்பான். நாம் கொடுக்கும்போது நாமும் ஆசீர்வதிக்கப்படுகிறோம். நீங்களும் அவ்விதமாக கொடுப்பீர்களா?

**மனப்பாட வசனம்**

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" லூக்.6:38




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 20 ஜனவரி -2020 கனி - 2


ஆசிரியருரை

## நாம் நடக்கவேண்டியவிதம்
## The Way that We Should Walk



நாம் எப்படிவேண்டுமானாலும் நடந்துகொள்ளலாம் யாரைப்பற்றியும் கவலைப்படவேண்டிய அவசியமில்லை என்று சொல்லுகிறவர்கள் அநேகர். நாம் இப்படித்தான் வாழவேண்டும், இப்படித்தான் நடக்கவேண்டும் என பரிசுத்தவேதாகமம் போதிக்கிறது. இதை ஏற்றுக்கொள்ளும் காது ஞானமுள்ளது. சங்கீதக்காரன் சொல்லுகிறான்; "வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது" என்கிறான் (சங்.65:11). எத்தனையோ வருடங்களை இந்தப்பூமி பார்த்துக்கொண்டிருக்கிறது. வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவன் வருஷங்களையும் காலங்களையும் திட்டம்பண்ணுகிறார். ஒவ்வொரு வருஷத்தையும் அவர் நன்மையால் முடிசூட்டுகிறார். ஒவ்வொருவரும் வருடத்தின் துவக்கத்தில் விழித்திருந்து அந்தவருடத் துவக்கத்தை காண ஆவலாயிருக்கின்றனர். இந்த வருடமாவது நமக்கு எந்தவிதமான கஷ்டங்களும் வராமல் இருக்கவேண்டும். இந்த வருடத்தில் இன்னின்னதை செய்யவேண்டும் என திட்டமிடுகின்றனர். மனிதர்களை உண்டாக்கிய தேவன் அவர்களுக்கு புதிய வருடங்களை கட்டளையிடுகிறார். அவருடைய பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது. கர்த்தருடைய வழி சுத்தமானதாகவும், தூய்மையானதாகவும், சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கிறதாகவும் இருக்கிறது. ஆகையால் வருடத்தின் துவக்கத்தில் நீங்கள் நடக்கவேண்டிய விதத்தை குறித்து வேதாகமம் பலவசனங்கள் மூலமாக பேசுகிறது.

கொலோ.3:24-ம் வசனம் "எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" என்று சொல்வதை நாம் வாசிக்கிறோம். நன்மைசெய்து, நன்மைசெய்து கெட்டபெயர்தான் வருகிறது என்று சொல்லி நன்மைசெய்வதை நாம் நிறுத்திவிடலாமா? நாம் சோர்ந்துபோகாமல் நன்மைசெய்யவேண்டும். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட எல்லாமே தேவனுடைய சித்தத்தை ஒவ்வொரு நாளும் செய்து நிறைவேற்றுகிறது. இவைகளை நீங்கள் நோக்கிப்பார்த்ததுண்டா? மனிதன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான். தேவனுடைய குமாரன் இப்பூமியில் எங்கும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார். அதைப்போல ஒவ்வொருவரும் எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யவேண்டும்.

பிலி.4:4-ம் வசனத்தில் "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" என பவுல் சொல்வதை

வாசிக்கிறோம். எங்கே சந்தோஷமாயிருப்பது. அடிபட்ட காலிலே அடிபட்டுக்கொண்டே இருக்கிறதே என்று சலித்துக்கொள்ளுகிறார்கள். அன்பானவர்களே, நீங்கள் கர்த்தருக்கு வெளியே இருந்தால் சந்தோஷம் உங்களுக்கு தூரமாயிருக்கும். பவுல் எழுதும்போது கர்த்தருக்குள் என்று எழுதுகிறார். கர்த்தருக்குள் வருவதற்கு சில வழிமுறைகள் இருக்கிறது. அப்படிச் செய்தால்தான் நீங்கள் கர்த்தருக்குள் வரமுடியும். எல்லோரும் கர்த்தருக்குள் இருப்பவர்களல்ல. நீங்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் அங்கமாக்கப்படும்போது நீங்கள் கர்த்தருடையவர்கள். அப்பொழுது கர்த்தருக்குள் இருப்பீர்கள். கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு நடப்பீர்கள். ஆகையால் பொல்லாப்பு உங்களுக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. நீங்கள் எது வந்தபோதும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கமுடியும். என் தேவன் எனக்காக யுத்தம் செய்வார் என்று அமைதலோடே இருந்து கர்த்தர் செய்யும் காரியங்களைப் பார்த்துக்கொண்டிருப்பீர்கள்.

அப்.பவுல் எபே.5:16-ம் வசனத்தில் "நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்" என்கிறார். நாட்கள் உருண்டோடுகிறது. இரண்டாயிரத்துக்கு முன் உள்ள காலத்தில் வாழ்ந்த நாம் இப்பொழுது இரண்டாயிரத்து இருபதில் வாழ்ந்துகொண்டுஇருக்கிறோம். இக்காலங்கள் போனவிதம் தெரியவில்லை. மனிதனுடைய நாட்கள் புல்லின் பூவைப்போல கடந்துபோகிறது. ஆகையால் இந்நாட்களை நாம் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வழி என்ன? இருக்கிற நாட்களை நலமானவைகளாக ஏற்றுக்கொண்டு அவைகளில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவேண்டும். நாளை என்பது நம்முடையது அல்ல. ஒரு நாள் பிறப்பதை நீ அறியாயே என வேதம் சொல்லுகிறது. ஆகையால் இன்றே இரட்சணிய நாள். இன்றே மனந்திரும்பி தேவனுக்கு ஏற்றவைகளைச் செய்ய பிரயாசம் எடுத்து காலத்தை பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

கலா.6:2-ம் வசனத்தில் "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" என்கிறார். ஆம், நாம் பிரமாணத்தை நிறைவேற்றவேண்டிய பொறுப்புடையவர்களாய் நடந்துகொள்ளவேண்டும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பது. ஒருவகையான ஊழியம். அதைப்போல பிறருடைய கஷ்டங்களை பகிர்ந்துகொண்டு அவர்களோடு ஒத்துழைப்பது மற்றொருவகையான ஊழியம். எந்த ஒரு ஊழியமும் கர்த்தருடைய பார்வையில் குறைவானது அல்ல. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கும்போது கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுகிறவர்களாயிருப்போம். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் இவைகளில் தேர்ச்சியடைந்திருந்தனர். பவுலுக்கு ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் மிகவும் உதவியாயிருந்தார்கள். இப்படிச்செய்யும்போது கர்த்தருடைய பணி தடையில்லாமல் நடைபெறும். உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. உலகம் உலகத்தை சிநேகிக்கிறது. இப்படிப்பட்ட உலகத்தில் கர்த்தருடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் உதவியாயிருப்பது புதிய உற்சாகத்தை ஏற்படுத்தும்.

2கொ.6:17-ம் வசனத்தில் "ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்". கிறிஸ்தவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமாயிருக்கிறான். இதை முதலாவது ஒரு கிறிஸ்தவன் புரிந்துகொண்டு, பரிசுத்தத்திற்கும் அசுத்தத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்து, அசுத்தமானவர்களோடு ஐக்கியம் கொள்ளாதிருக்கவேண்டும். இவ்வசனத்தை மீறி அநேகர் பாவத்திற்குள் மூழ்கிவிடுகின்றனர். ஆகையால் பலவிதமான சூழ்நிலைக்குள்ளாக தள்ளப்படுகிறார்கள்.

1கொ.10:33-ம் வசனம் "நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும் தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்". எந்த ஒரு மனிதனுக்கும் நாம் இடையூராக



## நாம் ஏன் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடக்கூடாது என்பதற்கான 15 காரணங்கள்

## 15 Reasons Why We Should Not Celebrate Christmas



- Douglas

1. ரோமப் பேரரசர் கான்ஸ்டன்டைன் என்பவரால் டிசம்பர் 25 ம் தேதி தெரிவு செய்யப்பட்டது, கிறிஸ்து இயேசுவின் பிறந்த நாளாக வல்லமையுள்ள தேவனால் தெரிவு செய்யப்படவில்லை. தேவன் ஒருவர் மாத்திரமே துல்லியமான நாளை அறிந்திருக்கிறார்.
2. ஏற்கனவே பண்டைய பாபிலோனியர் இந்த நாளில் பாகால் - பெரித் (மனிதகக் கடவுள்) தின பிறந்தநாளைக் கொண்டாடி வந்தனர். குறிப்பு: இரு பாபிலோனியர் பக்.85-89 இசோப் அலெக்சாண்டர். கிறிஸ்மஸ் உல்-தினம் (சிசு தினம்) என அறியப்பட்டது.
3. இயேசுவின் தாய் மரியாள் தன் வாழ்நாளில் ஒருமுறை கூட இயேசுவின் பிறந்தநாளை கொண்டாடியது கிடையாது.
4. இயேசு கிறிஸ்துவும் கூட தன்னுடைய வாழ்நாளில் ஒருமுறை கூட கிறிஸ்துமஸை கொண்டாடவில்லை.
5. சீஷர்கள் தங்களுடைய வாழ்நாளில் ஒருமுறை கூட கிறிஸ்துமஸைக் கொண்டாடவில்லை.
6. ஆதிக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துமஸைக் கொண்டாடவில்லை.
7. கிறிஸ்துமஸ் 336 கி.பி இல் கான்ஸ்டன்டைன் பேரரசரால் ஏற்படுத்தப்பட்டது.
8. கிறிஸ்துமஸ் வல்லமையுள்ள தேவனைத் தூஷிக்கும் மனிதத்துவ அமைப்பிற்கு உரியது. யாத்.20:3-5 ஐ பாருங்கள்.
9. தீர்க்கதரிசி ஒருபோதும் கிறிஸ்துமஸைக் கொண்டாடியதில்லை.
10. கிறிஸ்துமஸ் பண்டிகை தற்காலத்தில் அதிகபட்ச குற்ற அலையில் ஒன்று என FBI அறிக்கை 2014 தெரிவிக்கிறது.
11. இயேசு கிறிஸ்து தம்முடைய வழியைப் பின்பற்றும்படி நமக்குக் கட்டளையிட்டார், மனிதர்களுடைய வழியையல்ல. யோவா.14:6 மற்றும் 16:12-14 பாருங்கள்.
12. முக்கியமான கிறிஸ்துமஸ் சடங்காச்சாரங்கள் (கிறிஸ்துமஸ் மரம், அதன் அலங்காரங்கள், வேதத்தில் கடுமையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. தேவன் வேதாகமத்தில் இது சாத்தானின் ஒத்திகை எனத் தெளிவுப்படுத்துகிறார், ஏரே.10:1-5 ஐ பாருங்கள்.
13. ஒருவர் இயேசுவைத் தேவனுடைய குமாரன் எனக் கருதினால், கிறிஸ்துமஸ் தேவன் குமாரனைத் தந்தருளிய நாள் எனப் பொருள்படும். யோபு 25:4 ஐ பாருங்கள்.
14. ஒருவர் இயேசுவைத் தேவனாகக் கருதினால், கிறிஸ்துமஸ் தேவன் பிறந்த நாள் எனப் பொருள்படும். எபி.7:3 மற்றும் எண்.23:19 ஐ பாருங்கள்.
15. இரு பாபிலோனியர் எப்படி ரோமானியர் மூலம் கிறிஸ்துமஸ் என்ற பெயரிலும் அமைப்பிலும் கிறிஸ்தவத்துக்குள் விக்கிரகாராதனை புகுந்தது எனத் தெளிவாக விளக்குகிறது. யாருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்து சொல்வதைத் தவிர்த்து விடுங்கள்.

தேவன் தாமே நம்மை பிசாசின் தந்திரங்களுக்கு விலக்கி நீதியின் பாதையில் வழிநடத்துவாராக! ஆமென்!

## நடப்புச்செய்திகள்

- ❒ வெறுப்பால் இந்தியாவை அழிக்க அனுமதிக்கக்கூடாது – ராகுல்
- ❒ தனுஷ்கோடி – பேரழிவின் 55 வது ஆண்டு நினைவு நாள் 1964 டிசம்பர் 23.
- ❒ பல சாதனைகள்... உலகின் நம்பர் ஒன் பேட்ஸ்மேன் ரோஹித் சர்மா.

| | |
|---|---|
| 41. E. ஜாய்ஹலன்புனிதா | - சென்னை |
| 42. Mrs. புளோரா எழில் | - ஆம்பூர் |
| 43. Mrs. தேவதாதேவபிரியம் | - சென்னை |
| 44. Mrs. ஃபிராங்கலினாஜான் | - ஊட்டி |
| 45. S. செல்வராஜ் சாலமோன் | - திருநெல்வேலி |
| 46. S.A. சாமுவேல் | - பரமத்தி |
| 47. S.R. பெரியசாமி | - சேலூர் |
| 48. R. பாரதி | - கோபி |
| 49. V.C. ரூபவல்யா | - நாசரேத் |
| 50. J.S. ஜெயா மேரித்தாய் | - திண்டுக்கல் |
| 51. G. பூங்கோதை | - கோபி |
| 52. S.V. தனபால் | - கொடுமுடி |
| 53. J. விக்டர்சுவிசேஷமுத்து | - தூத்துக்குடி |
| 54. Mrs. எபிநேசர்எட்வோர்டு | - கடலூர் |
| 55. D. தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 56. Mrs. அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 57. S. ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 58. K.M. சாந்தி | - எம்.வாடிப்பட்டி |
| 59. Mrs. ஜெபாமோசஸ் | - தூத்துக்குடி |
| 60. Mrs. பாக்கியதாய்செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 61. Mrs. பிரமிளாரேவதி | - கோவை |
| 62. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 63. M. முருகன் | - நாமக்கல் |

| | |
|---|---|
| 41. S.A. சாமுவேல் | - பரமத்தி |
| 42. S.R. பெரியசாமி | - சேலூர் |
| 43. A. டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 44. Mrs. தேவதாதேவபிரியம் | - சென்னை |
| 45. T. ராஜாத்தி | - கோம்பை |
| 46. Mrs. பியூலாஜேசுராஜ் | - புதுவை |
| 47. Mrs. சாந்தாபழனி | - தருமபுரி |
| 48. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 49. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 50. S. தங்கம் | - கன்னியாகுமரி |
| 51. M. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 52. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 53. Mrs. ரூத்ஜெயராணி | - திருநெல்வேலி |
| 54. T. ஏஞ்சலின்நேசமலர் | - சாந்தாபுரம் |
| 55. Miss. சாந்தாதேவி | - தேனி |
| 56. Mrs. ஜெபாமேசஸ் | - தூத்துக்குடி |
| 57. J. இளவரசி ஜோபிதா | - கோவை |
| 58. J. விக்டர்சுவிசேஷமுத்து | - தூத்துக்குடி |
| 59. Mrs. இராஜம்மாள்மனோகரன் | - சென்னை |
| 60. M. முருகன் | - நாமக்கல் |
| 61. K.M. சாந்தி | - எம்.வாடிப்பட்டி |
| 62. P. ஸ்டெல்லாமேரி | - திருப்பூர் |
| 63. Mrs. ஃபிராங்கலினாஜான் | - ஊட்டி |
| 64. Mrs. ஜேன் தர்மராஜ் | - திருநெல்வேலி |

## ஆசிரியர் கடிதம்...

**வாசகர் அனைவருக்கும் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்கள். புத்தாண்டு இதழில் உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம் பல நல்ல தீர்மானங்களை தேவ சமுகத்தில் எடுத்திருப்பீர்கள் அவைகளின்படி நடக்க நம்தேவன் உங்களுக்கு உதவிடுவாராக! இந்த மாத இதழை இந்த வருடத்திற்குள்ளாக குறைந்த பட்சம் இருபதுபேருக்காவது கொடுத்து சத்தியத்தை அவர்களும் அறிந்துகொள்ள உதவிடுங்கள். இவ்வருட சந்தா செலுத்தாதவர்கள் செலுத்துங்கள். இவ்விதழுக்குரிய சந்தா செலுத்த முடியாதவர்களுக்கு நீங்கள் சந்தா செலுத்த முன்வாருங்கள். உலகமெங்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட உதவிடுங்கள். உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்திற்காகவும் ஜெபிக்கிறோம். உங்களுடைய மேலான கருத்துக்களை எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

**யாவருக்கும் எங்களது புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

**2020** **ஆசிரியர்**

**நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்**
**எபேசியர் 5:16**

## ஜெபியுங்கள்



- புதிய வருடத்தைக் கொடுத்த கர்த்தருக்கு நன்றி சொல்லி...
- நாட்டின் சமாதானத்திற்காக...
- ஊழியங்கள் விரிவடைய...
- மாவட்டங்கள் தோறும் பணியாற்றும் தேவ பணியாளர்களுக்காக...
- தேவன் நமக்குக் கொடுத்த வாசகர்களுக்காக...
- உலக முழுவதிலும் சுவிசேஷம் தடையின்றி அறிவிக்கப்பட...
- நமது YouTube சேனல் ஊழியத்திற்காக...



ஜீவிக்கக்கூடாது. அவனவன் செய்கிற காரியத்திற்கு ஏற்ற பலனை தேவனால் பெற்றுக்கொள்ளுவான். உலகத்தில் உண்டாக்கப்பட்ட எந்த ஒரு மனுஷனுக்கும் நாம் இடறலற்றவர்களாகவே இருக்கவேண்டும். நாம் ஒவ்வொருவரும் சுயாதீனமுள்ளவர்களாயிருக்கிறோம். யாரும் யாருக்கும் அடிமைகளல்ல. நாம் யாவரும் தேவனுடைய கரங்களில் உண்டாக்கப்பட்டவர்கள். மற்றவர்களுடைய காரியங்களுக்கு நாம் உதவியாயிருக்கவேண்டும், உபத்திரவமாயிருக்கக்கூடாது. அதைப்போல தேவனுடைய சபைகளுக்கு இடையூராக இருக்கக்கூடாது. பவுல் சபைகளை துன்பப்படுத்தினான். அப்பொழுது கர்த்தர் அவனை சந்தித்து நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார். அவன் மனமாற்றப்பட்டு கர்த்தருக்கு ஏற்றமனிதனாக அவருடைய ஊழியத்தை கட்டுகிறவனாக மாறினான். நீங்களும் யாவருக்கும் இடறலற்றவர்களாயிருக்க பிரயாசப்படுங்கள்.

ரோம.12:10-ம் வசனம் "சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்" என படிக்கிறோம். சகோதரசிநேகம் என்பது அது அற்புதமானது. சகோதரர்கள் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையானது என தாவீது பாடுகிறார். அங்கே தேவனுடைய ஆசீர்வாதம் தங்கும். தேவன் அவர்களுடைய வேண்டுதலைகேட்பார். அதைப்போல ஒருவரையொருவர் கனம்பண்ணுகிறதிலும் முந்திக்கொள்ளவேண்டுமெனபார்க்கிறோம். சபைக்கு வருகிறவர்கள் அவர் முதலாவது நமக்கு ஸ்தோத்திரம் பண்ணட்டும் பின்பு நாம் பண்ணுவோம் என்று அநேகர் நினைப்பதுண்டு. ஆனால் வசனம் இவைகளில் நாம் முந்திக்கொள்ளவேண்டுமென போதிக்கிறது. ஒருவரையொருவர் பார்க்கும்போது எவர்கள் கனம்பண்ணுகிறதிலே முந்திக்கொள்ளுகிறார்களோ அவர்களே இந்தவசனத்தை நிறைவேற்றுகிறார்கள்.

அப்.20:7-ம் வசனம் "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" என ஒரு எச்சரிப்பைக் கொடுக்கிறது. கர்த்தருடைய சபையை கவனிக்கிற மூப்பர்கள் மிகவும் எச்சரிப்புடன் இருக்கவேண்டியது அவசியம். கடலுக்குள் மூழ்கி முத்து எடுக்கிறார்கள். அதை எடுத்தவர்கள் எவ்விதமாக பாதுகாப்பார்கள். தேவன் பிசாசின் கொடிய கோரப்பற்களிலிருந்து தமது மந்தையை தமது இரத்தத்தை சிந்தி சம்பாதித்து இருக்கிறார். அப்படி சம்பாதிக்கப்பட்ட சபை காக்கப்படவேண்டுமல்லவா?

யோவா.15:4-ம் வசனம் "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்". ஒவ்வொரு ஆண்டும் நாம் அவருக்கு ஏற்றகனிகளைக் கொடுக்கும்படியாக தேவன் விரும்புகிறார். அந்த கனிகள்: ஆவிக்குரிய கனிகள்; அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்ட கனிகள் நம்மில் நிறைந்து காணப்படவேண்டும். அதற்கு ஒரே வழி நாம் கர்த்தரில் நிலைத்திருக்கவேண்டும். எப்படி திராட்சை செடியில் நிலைத்திருக்கும் கொடிகள் அதற்கேற்ற கனிகளைக் கொடுக்கிறதோ, அதைப்போல நாம் கர்த்தரிலும் அவருடைய உபதேசத்திலும் நிலைத்திருக்கும்போது அவருக்கேற்ற கனிகளைக் கொடுப்போம்.

லூக்.10:20-ம் வசனம் "ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச்

சந்தோஷப்படுங்கள்" என்றார். இன்றைக்கு உங்களுக்கு சந்தோஷம் எந்த வகையில் வருகிறது. சிலர் கர்த்தருடைய நாமத்தினாலே அதைச் செய்கிறோம் இதைச் செய்கிறோம் எங்களாலே பிசாசுகள் பயந்து ஓடுகின்றன என்று தங்களைக்குறித்து பெருமையாக சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் வசனம் உங்களுடைய நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்று சொல்லுகிறது. ஏனெனில் உம்முடைய நாமத்தினாலே நாங்கள் பிசாசுகளை துரத்தினோம் அல்லவா அநேக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தோம் அல்லவா என்பார்கள்; அவர்களைப் பார்த்து அக்கிரமசெய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று கர்த்தர் அந்நாட்களிலே சொல்லுவார்.

மாற்.14:38-ம் வசனம் "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்". சோதனைகளை சகிக்கிறவன் பாக்கியவான் என காண்கிறோம். பிசாசு இயேசுவையே சோதித்தான். ஆகையால் மனிதர்களாகிய நாம் அவனுக்கு முன்பாக எம்மாத்திரம் நம்மையும் பலவிதமான இச்சைகளாலே சோதிப்பான் மற்றும் பல விதமான கஷ்டங்களை உண்டுபண்ணுவான். ஆகையால் நாம் சோதனைக்குட்படாதபடிக்கு விழிந்திருந்து ஜெபிக்கவேண்டும். விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் எனக் காண்கிறோம். ஜெபத்திற்கு வல்லமையுண்டு கர்த்தர் ஜெபத்தை கேட்கிறார்.

கடைசியாக மத்.7:15-ம் வசனம் "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப்போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்"என்கிறது. இன்றைய நாட்களில் கள்ளத் தீர்க்கதரிசிகள் பெருகி விட்டார்கள். பிசாசு ஒருவகையில் அப்படிப்பட்டவர்களை எடுத்து பயன்படுத்திவருகிறான். ஆகையால் அவைகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். நாம் இதுவரை 12 வசனங்களை தியானித்தோம். இவை பன்னிரெண்டு புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை. இவ்வருட பன்னிரெண்டு மாதங்களுக்கு ஒவ்வொன்றாய் தியானித்து அதன்படி நடக்க உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**நாம் ஏன் அவருடைய வழிகளில் நடத்தப்படுகிறோம்?**

நிலையான ஆசீர்வாதங்களை தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொள்ளும்படியாகவும், அவருக்குப்பிரியமானதை செய்யும்படியாகவும் நடத்தப்படுகிறோம். தாவீது சொல்கிறார்; "உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்" என்கிறார் (சங்.73:24). ஆகையால் நம்மை அவருடைய வழியில் வேதவசனத்தின் மூலம் நடத்துகிறார். இந்த வழியில் நடக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா? உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## வாசகர் கடிதம்

**ஆசிரியர் அவர்களுக்கு போட்டியில் 10ம் கேள்வி என்னை கொஞ்சம் தடுமாறச் செய்தது பதில் கிடைக்காமல் சற்று தடுமாறினேன்!**

**தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் இது மெய்யான சத்திய வசனம் கண்களை மூடி சற்ற நேரம் தியானம் செய்தபோது எப்போதோ ரூத் சரித்திரத்தை படித்த ஞாபகம் வந்தது, ரூத்தைப்பற்றிய செய்தியும் ஞாபகம் வந்தது. பதில் கிடைத்தது. இயேசு சதாகாலமும் என்னோடு இருக்கிறார். நன்றி ஆண்டவரே!** – K.S மாணிக்கவாசகம்


'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை ஒவ்வொரு மாதமும்
10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509
என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்




## வேத அறிவுப்போட்டி 230-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. புருஷர்கள் | - எபே.5:28 |
| 2. பிலேயாம் | - எண்.23:10 |
| 3. பவுல் | - பிலி.1:18 |
| 4. கொலை செய்துபோடவேண்டும் | - உபா.13:6 |
| 5. பவுல் | - கொலே.1:23 |
| 6. எகிப்துக்கு | - யோசு. 24:4 |
| 7. நலமானதைப் | - 1தெச.5:21 |
| 8. விற்றுப்போட்டார் | - நியா. 10:7 |
| 9. எச்சரிக்கையாயிருங்கள் | - 2தெச.2:3 |
| 10. ரூத் | - ரூத் 2:13 |

## வேத அறிவுப்போட்டி 231-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. ஆம் | - 1தீமோ.6:5 |
| 2. சரி | - 1சாமு.15:29 |
| 3. சரி | - 2தீமோ.1:5 |
| 4. ஆம் | - 2சாமு.1:23 |
| 5. சரி | - தீத்து.3:5 |
| 6. எலியா | - 1இரா.17:22 |
| 7. பிலேமோன் | - பிலே.4 |
| 8. யூதா | - 2இரா.17:18 |
| 9. இல்லை | - எபி.10:26 |
| 10. சுவிசேஷமாய் | - 1நாளா.16:23 |

## வேத அறிவுப்போட்டி எண் 230ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. Mrs. ஜெயமணி ராஜம்மாள் | - கடலூர் |
| 2. Mrs. அன்புகமலம் | - காரைக்குடி |
| 3. Mrs. பாலின் மார்ட்டின் | - காரைக்குடி |
| 4. B. ஞானதீபம் அருள்ராஜ் | - இடையான்குடி |
| 5. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 6. R. அந்தோனியாம்மாள் | - கலுங்குவிளை |
| 7. A. டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 8. K.S. மாணிக்கம் | - திருச்சி |
| 9. S.V. தனபால் | - கொடுமுடி |
| 10. S. ஜாய் | - நெல்லூர் |
| 11. T. இராஜாத்தி | - கோம்பை |
| 12. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 13. Mrs. ரத்தினாபாய்பிரசாத் | - மதுரை |
| 14. Mrs. ரூத்ஜெயராணி | - திருநெல்வேலி |
| 15. J. ஆலிவ் | - கோவை |
| 16. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 17. Mrs. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 18. Mrs. தேவிராஜசிங் | - திருப்பூர் |
| 19. Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 20. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 21. Miss. சாந்தாதேவி | - தேனி |
| 22. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 23. Mrs.கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 24. K. ராணிமூர்த்தி | - திருநெல்வேலி |
| 25. Mrs. பாலின்டேனியேல் | - சென்னை |
| 26. E. அதிசயம் | - பனைகுடி |
| 27. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 28. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 29. Mrs. இராஜம்மாள்மனோகரன் | - சென்னை |
| 30. Mrs. ஜேன் தர்மராஜ் | - திருநெல்வேலி |
| 31. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 32. Mrs. ரூபிஜெயசேகர் | - கலுங்குவிளை |
| 33. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 34. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 35. J. இராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 36. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 37. J. இளவரசி ஜோபிதா | - கோவை |
| 38. Mrs. ஜெத்சிசெல்வின் | - சென்னை |
| 39. K. ரத்னாபாய் பிரசாத் | - மதுரை |
| 40. Mrs. சாந்தாபழனி | - தர்மபுரி |

## வேத அறிவுப்போட்டி எண் 231ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. K. ராணி | - திருநெல்வேலி |
| 2. Mrs. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 3. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 4. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 5. E. அதிசயம் | - பனைகுடி |
| 6. J. ஆலிவ் | - கோவை |
| 7. R. அந்தோனியம்மாள் | - கலுங்குவிளை |
| 8. Mrs. ஜெபசீலிஜெயகொடி | - திருச்சி |
| 9. Mrs. கெத்சிசெல்வின் | - சென்னை |
| 10. Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 11. Mrs. பாலின்டேனியல் | - சென்னை |
| 12. Mrs. தேவிராஜசிங் | - திருப்பூர் |
| 13. Mrs. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 14. S. ஜாய் கமலம் | - நெல்லூர் |
| 15. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 16. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 17. J.S. ஜெயாமேரிதாய் | - திண்டுக்கல் |
| 18. S. ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 19. D. தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 20. S.V. தனபால் | - கொடுமுடி |
| 21. Mrs. அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 22. S. செல்வராஜ் சாலமோன் | - திருநெல்வேலி |
| 23. Mrs. ஜெயமணிராஜம்மாள் | - கடலூர் |
| 24. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 25. S. பிரமிளாரேவதி | - கோவை |
| 26. J. ஜான்ஸி | - ஆனைமலை |
| 27. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 28. G. பூங்கோதை | - கோபி |
| 29. Mrs. பாக்கியத்தாய் செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 30. Mrs. ரூபிஜெயா | - கலுங்குவிளை |
| 31. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 32. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 33. K. ரத்னாபாய்பிரசாத் | - மதுரை |
| 34. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 35. Mrs. ஃபுளோரா எழில் | - ஆம்பூர் |
| 36. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 37. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 38. Mrs. ரூபவல்யா | - தூத்துக்குடி |
| 39. Mrs. ஜாய்ஹெலன் புனிதா | - சென்னை |
| 40. P. சந்திராடேனியல் | - நஞ்சான்குளம் |

**வேதகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்

ஆம் எனில் ☑ குறியிடவும்



**தற்சோதனை பகுதி - 16**

**16. இயேசப்பா என்று சொல்வது சரியா?**

1. ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து ☐ வசன ஆதாரம்

-----------------------------------------------------------------

2. இயேசுவை அப்பா, பிதாவே என்று சொல்லப்பட்டிருக்கிறது

☐ வசன ஆதாரம் ------------------------------------------------

3. மரியாள்: ரபூனி என்றாள் போதகர் என்று அர்த்தமாம் ☐ வசன

ஆதாரம் ------------------------------------------------------

4. பெற்றோரை அப்பா என்று அழைப்பதைப்போல ☐ வசன

ஆதாரம் ------------------------------------------------------

5. யோவான்: தேவ ஆட்டுக்குட்டி என்றான் ☐ வசன ஆதாரம்

-----------------------------------------------------------------

6. அன்பினால்அப்பா என்றழைக்கலாம் ☐ வசன ஆதாரம்---------

-----------------------------------------------------------------

7. நாத்தான்வேல்: நீர் இஸ்ரவேலின் ராஜா என்றான் ☐ வசன ஆதாரம்-

-----------------------------------------------------------------

8. அவருடைய சீஷர்கள் இயேசுவை அப்பா என்றனர் ☐ வசன

ஆதாரம் ------------------------------------------------------

9. கானானிய ஸ்திரீ: ஆண்டவரே என்றாள் ☐ வசன ஆதாரம்-

---------------------------------------------------------

10. அப்பா என்று சொல்வது வேதாகம போதனை ☐ வசன ஆதாரம்

-----------------------------------------------------------------

**தேவனுக்கு அஞ்சி அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள்**
**பிரசங்கி 8:12**

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதை கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை கத்தரிப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
Contact Us: 94435 58041




# பழைய பாவ மனிதன் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

-J.C.Choate

## பாடம் -7 மது அருந்துதல் - Drinking

**உ**ங்கள் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவின் நாமத்தில் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இன்னொரு வேதாகமப் பாடத்தோடு திரும்பவும் வருகிறேன். ஒரு துன்மார்க்கனாய் இருப்பவனுக்கு மேலாக, ஒரு நீதிமானாக இருப்பவனுக்கு வரும் நன்மையினிமித்தம் நாம் தீமைக்கு மேலாக நன்மையையே அழுத்திக் கூறிக்கொண்டிருக்கிறோம். நிச்சயமாக நாம் நம்முடைய பழைய பாவ மனிதனைக் களைந்து போட்டுவிட்டு கிறிஸ்துவுக்குள் புதிய மனிதனைத் தரித்துக்கொள்வதினால் இது நம்முடைய செல்வாக்காக இருக்கிறது.

நமக்கு மிகத் தெளிவாக இந்த ஞானத்தைக் கவனிக்க உதவுகிறது. அதன் பின் நாம் 'குடித்தல்' குறித்த பிரச்சனையைப் பற்றியும் விவாதிக்கப்போகிறோம். நான் போதை தரக்கூடிய பானத்தைப் பற்றியும் இந்த தொற்று நோயால் நாம் எவ்வாறு நம்மை விடுவித்துக்கொள்வது பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறேன்.

கள், ஒயின்ஸ், பீர்ஸ் விஸ்கிஸ் போன்ற எல்லாவகையான மது பானங்களை குடிப்பது பொதுவாகவே உலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம். உயரக சரக்குகள் பணம் படைத்தவர்கள் மத்தியில் அதிகம் காணப்படுகிறது, இது பணம் படைத்தவர்கள் இவற்றை ருசிப்பது அதிக விலையுள்ள போதை தரக்கூடிய மது பானங்கள் என்பதைக் காண்பிக்கிறது. இக்கருத்து உண்மையாயிருக்கையில், ஒருவனுடைய நண்பர்கள் குடிக்கக் கொடுப்பதற்கு ஏதுவாகயிருக்கிறது, குறிப்பாக வெளிநாட்டு சரக்குகளை குடிக்கின்றனர், இது ஒருவருடைய நோக்கங்கள் தன் நிலையை மற்றவர்களுக்கு உயர்த்திக் காண்பித்து தன்னை வெற்றியுள்ளவனாக காண்பிக்கிறதாகக் காணப்படுகிறது.

நீங்கள் எப்போதாவது விமானத்தில் பறந்திருப்பீர்களானால், இலவசமாகப் குடிப்பதற்கென்றே அநேக ஜனங்கள் விமானத்தில் பறக்க வந்திருப்பதை நீங்கள் சந்தேகமின்றி கவனித்திருப்பீர்கள். பீர் பறிமாறப்படும் சிற்றுண்டிகளைச் சுற்றிலும் பீர் குடிப்பவர்கள் பாட்டில் பாட்டிலாக வாங்கிக் குடிப்பதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா?

பணக்கார வியாபார மக்கள் மத்தியிலும் அரசாங்க வட்டாரங்கள் மத்தியிலும் ராணுவத்திலும் சினிமாக்காரர்கள் மத்தியிலும் மேலும் செல்வம் படைத்து ஏதோ ஒருவர் அல்ல பல மனிதர்கள் மத்தியில் குடிப்பது என்பது தொடர்ந்து நடைபெறுகிறது. இது செல்வம் பெற்றிராத மக்கள் கூட்டத்தின் மத்தியிலும் குடிப்பழக்கம் தொடர்கிறது. அவர்கள் விலைமலிவான சரக்குகளை, உள்ளூர் தயாரிப்புகளை, மேலும் வீட்டில் தயாரிப்பவைகளையும் கூட குடித்து, தொடர்ச்சியாக அதனால் மாட்டி இழுக்கப்பட்டுள்ளனர். அனைத்தும் அவர்களுடைய வாழ்விற்கு ஆபத்தானதும் மற்றவர்களுடைய வாழ்விற்கு ஆபத்தானதுமாகும். மதுபானம் அருந்தும் பழக்கத்திற்கு மாறியது, தாங்கள் உயிர் வாழ்வதற்கு இது தேவையானது என நினைத்து இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என அதில் நிலைத்திருக்கின்றனர். அதன்

பிறகு ஒருவனுடைய மது அருந்தும் பழக்கம் மூளை பாதிப்பு, இருதயம் பாதிப்பு, புற்றுநோய், உணர்ச்சிவசப்படும் தொந்தரவுகள், பணவிரயம், மற்றும் பல பாதிப்புகளைக் குடிப்பவர்கள் பெறவேண்டிருக்கிறது என்பதே அவனுடைய விளைவாகும். அவன் கார் ஓட்டினால், அவனால் மிக நன்றாகவே தன்னை கொல்லமுடியும் அல்லது மற்றொருவனை கொல்லுவான் அல்லது அதிகமாக ஒன்று மறியா மக்களை கொன்றுவிடுவான். உண்மையாகவே இது மிக அதிகமாக கிரயம் செலுத்த வேண்டியதாயிருக்கும்.

தொடர்ச்சியாக மது அருந்துவதினால் ஒருவன் எப்படி நன்மையை பெறமுடியும்? அதனால் உணவின் மதிப்பை அறியமுடியாது. எந்த ஒரு நன்மையையும் பெறமுடியாது என அதைப்பற்றி நான் அறிவேன். அதனால் பல பிரச்சனைகள், துயரங்கள், மேலும் தலைவலிகள் போன்றவை மது அருந்துபவர்களுக்கு வரும் அடிக்கடி மரியாதை குறைகிறது, தன் வேலையை இழக்கின்றான், குடும்பத்தை இழக்கின்றான், உடல் நலத்தை இழக்கின்றான், அதிகமாக மது அருந்துவதினால் தன் ஆத்துமாவை இழக்கின்றான்.

மது அருந்தும் பழக்கம் ஒருவனுடைய உடல் நலத்திற்கு நல்லது அல்லது பவுல் தீமோத்தேயுவுக்கு அவனுடைய வயிற்றிக்காக கொஞ்சம் திராட்சரசமும் எடுத்துக்கொள் என்றான் என்று சொல்லி இதை நியாயப்படுத்த முயற்சிக்கிறவர்கள் இருக்கிறார்கள்.ஆனால் மருந்து குடிக்கிறவர்கள் யார் பாட்டில் முழுவதையும் குடிக்கிறார்கள்? பவுல் தீமோத்தேயுக்கு உன் பலவீனத்திற்காக கொஞ்சம் திராட்சரம் எடுத்துக்கொள் என்று புத்திமதிசொன்னதை நீங்கள் கவனிப்பீர்கள். இன்று பீர், அல்லது விஸ்கி குடிக்கிற மக்கள் பயன்படுத்துகிற முறைக்கு முற்றிலும் மாறுபட்டது இது.

வழக்கறிஞராக இருப்பவர் சகவாசப் பிரியத்திற்காக மது அருந்துவது தவறில்லை அல்லது அதைபோல இது நவீனத்திற்காக பயன்படுத்தப்படுகிறது என்கின்றனர். ஆனால் எவ்வளவு தூரம் உன்னால் குடிக்க முடியும் என யார் கூறப் போகின்றனர்? இனி மேலும், யாரேனும் ஒருவர் சகவாசப் பிரியத்திற்காக குடிக்க ஏன் கொடுக்க வேண்டும்? மதுபானங்கள் உன்னை எங்கு கொண்டு செல்லும் என நீ அறியும்போது, இதைவிட்டு விலகுவது மிக மிக நியாயமானதாக இருக்கும். பின்பு திருமணத்திற்காக வீட்டில் தயாரித்த மதுபானங்களைக் குடித்ததினால் இன்று மரித்துப்போன பலரைப் பற்றி நீ நினைத்து பார், மேலும் நேரத்தை களிப்புடன் கழிப்பதற்காக குடித்ததற்கு பதிலாக அந்த நேரம் துயரமாக மாறி, குடித்த பலர் மரித்துப் போனதையும் நினைத்துப்பார். இருந்தபோதிலும் தொடர்ந்து மது அருந்தும் மக்களுக்கு இது புரிந்து கொள்ள கடினமானதாயிருக்கிறது. வெளிப்படையாகவே, இது சிலருக்கு நடைபெறும் எனவும், ஆனால் இது தங்களுக்குக் ஒருபோதும் ஏற்படக்கூடாது எனவும் இது வேறுயாருக்காவது நடைபெறும் எனவும் காரணம் காட்டுகின்றனர். ஆனால் இது முட்டாள்தனமான நினைவாயிருக்கின்றது.

தேவன் இது குறித்து என்ன சொல்லுகிறார் என்று அறிய நாம் இப்போது வேதாகமத்திற்குத் திரும்புவோம். நீதிமான் "திராட்சரம் பரியாசம் செய்யும், மதுபானம் அமளிபண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல" (நீதி.20:1) என சாலொமோன் சொல்லுகிறான். ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளபடி, மதுபானம் குடிப்பதற்கு கவர்ச்சிகரமான ஒன்று என சிலர் நினைக்கின்றனர், ஆனால் சாலொமோன் கருத்துப்படி இது இதற்கு நேர் எதிரிடையானது. மனிதன்



காணப்பட்ட தாழ்மை நம்மிடத்திலும் காணப்பட்டால் தேவனுடைய கண்களில் நமக்கும் தயை கிடைக்கும். இயேசுவினிடத்தில் தன் மகள் பிசாசின் பிடியிலிருந்து சுகம்பெற வேண்டுமென்று வந்த கானானிய ஸ்திரீ கூட தன்னை நாய்க்குட்டிகளுக்குச் சமமாக்கி இயேசுவின் பாரட்டுதலையும் மகளுக்கு சுகத்தையும் பெற்றுக்கொண்டாள் (மத்.15:22-28). இவ்விதமாய் தன்னை தாழ்த்திய போது " இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்" என்று மத்தேயு 15:28ல் வாசிக்கிறோம். நாமும் இவ்விமாக நம்மைத் தாழ்த்துவோம். தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுவோம். பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்.

மேலும் இவள் ஒரு குணசாலியான பெண் என்று போவாஸ் ரூத்தைப் பாராட்கிறான். ரூத்3:10,11ல் "அதற்கு அவன்: மகளே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக; நீ தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால், உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது. இப்போதும் மகளே, ...நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள்" என்றான். என்ன அருமையான சாட்சி இது! இளம் விதவைகளைக் குறித்து வேதம் தெளிவாகக் கூறுகிறது. நாமும் அநேகரை சமுதாயத்தில் பார்த்திருக்கலாம். ரூத்தைக் குறித்து போவாஸ் கூறும்போது வாலிபர்களுக்குப் பிறகே போகாததினால், உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் பிந்தின நற்குணம் உத்தமம் என்கிறான். அப்படியானால் அவள் தான் இளம் விதவையாயிருந்த போதும் பாவஞ்செய்யாதவளாக தன் உத்தமத்தைக் காத்து நடந்திருக்கிறாள் என்று பொருள். இந்த நற்குணம் நம்முடைய இளம் சகோதரிகளுக்கு நற்போதனையாக இருக்கட்டும்!

மோவாபிய ஸ்திரீயாகிய இந்த ரூத்தின் தீர்மானம், மனஉறுதி, மாமியின் மேலிருந்த அன்பு, தேவனையும் தேவனுடைய ஜனத்தையும் தனதாக்கிக் கொண்ட வைராக்கியம், தாழ்மை, நற்குணம் ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தது. இவளுடைய கசந்த மாரா மதுரமானது. போவாஸ் இவளைத் திருமணம் செய்தான். இவள் இந்த ஓபேத் பெற்றாள். ஓபேத் தாவீதின் தகப்பன் ஈசாயைப் பெற்றான். இயேசு இந்த வம்சத்தின் வழியாக மாம்சத்தில் பிறந்தார். உலகத்தை மீட்கும் இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் இவள் பேர் பட்டியலிடப்பட்டுள்ளது (மத்.1:1,5-6) என்பது மதுரமான செய்தி அல்லவா! இவளுடைய குணாதிசயங்கள் நமக்குப் பாடமாக இருக்கட்டும். இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டு பேராகிய ராகேலைப் போலவும் லேயாளைப் போலவும் ரூத்தை வாழ்ந்திருக்கப்பண்ணின (ரூத்4:1) கர்த்தர் நம்மையும் ஆசீர்வதிப்பாராக! நம் வாழ்வின் கசப்பை மதுரமாக்குவாராக!

## தெரிந்துகொள்வோம்

*-K.R.K.Ravi Asir*

- இந்தியாவில் முதலாவது தானியங்கித் தொலைபேசி நிலையம் 1914-ம் ஆண்டில் சிம்லா நகரில் அமைக்கப்பட்டது.
- இந்தியாவின் முதல் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்.
- வீடுகளுக்கு எண்கள் இடும்பழக்கம் முதன் முதலில் பிரான்ஸ் தலைநகரான பாரீஸ் நகரில் துவங்கியது தபால் கொடுப்பதற்காக இம்முறை கையாளப்பட்டது.
- தபால் பெட்டிகளை தெருக்களில் வைக்கும் பழக்கம் இங்கிலாந்தில் 1815 ஆண்டில்தான் தொடங்கியது.
- தேசியக் கொடி என்று முதலில் உருவாக்கப்பட்டது டென்மார்க் தேசத்தில்தான் 1219-ம் ஆண்டு வடிவமைக்கப்பட்ட இந்த கொடியில் சிவப்பு பின்னணியோடு சிலுவை காணப்படும்.

மாறுவோம். நாம் ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தில், அதாவது இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து அறிக்கையிட்ட பின் அதில் உறுதியாக இருக்கவேண்டும்.

மேலும் இந்த ரூத்தின் மன உறுதியைக் குறித்து தியானிப்போம் ரூத் 1:17,18ல் "...மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள்" என வாசிக்கிறோம். இப்படிப்பட்ட வாக்குறுதிகளை கிறிஸ்தவ திருமணங்களில் மணவாளனும் மணவாட்டியும் மரணம் நம்மைப் பிரிக்கும் வரை துன்பத்திலும் இன்பத்திலும், சுகத்திலும் சுகவீனத்திலும் பிரியாதிருப்போம் என்று தேவசமூகத்தில் வாக்களிப்பார்கள். ரூத் மேலும் சொல்லுகிறாள் உம்மை விட்டு வேறொன்றும் என்னைப் பிரித்தால் கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர், அதாவது என்னைத் தண்டிக்கக்க கடவர் என்று சொன்னாள். நம்மில் எத்தனை பேர் கிறிஸ்துவோடு இதற்கும் மேலான அன்புடன் எது வந்தபோதிலும் அவருடைய பிரசன்னத்தை விட்டு பிரியாமல் இணைக்கப்பட்டவர்களாய் மன உறுதியுனிருக்கத் தீர்மானிக்கிறோம்? கிறிஸ்துவை விட்டு எவ்வித சக்தியும் நம்மைப் பிரிக்காதிருக்க ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். இதைக் குறித்து பவுல் சொல்லும்போது "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?... மரணமானாலும், ஜீவனானாலும் ... உயர்வானாலும் தாழ்வானாலும் வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பரிக்கமாட்டாதென்று நிச்சயிருத்திருக்கிறேன்" (ரோம.8:36-39) என்றார். நாமும் இப்பேர்பட்ட மனஉறுதியைக் கொண்டிருப்போம். கிறிஸ்துவின் ஆவியானவர் நம்மோடிருப்பாரானால் கசப்பும் மதுரமாகும்.

வேதம் சொல்லுகிறது கிரியையில்லாத விசுவாசம் செத்தது என்று. ரூத் மோவாப் தேசத்தைவிட்டுப் புறப்பட்ட போது தம் மாமியைப் பார்த்து உம்மை விட்டு பிரியமாட்டேன் உம் ஜனம் என் ஜனம் உம்முடைய தேவன் என் தேவன் என்று கூறினாள். அதைப்போலவே பெத்தலகேமிற்கு வந்த பின்பு நகோமியின் ஜனத்தோடு வாழ ஆரம்பித்தாள். இதைக் குறித்து போவாஸ் என்பவன், ".... உன் புருஷன் மரண மடைந்த பின்பு, நீ உன் மாமியாருக்குச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜந்மதேசத்தையும் விட்டு முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது" (ரூத் 2:11) என்றான். ரூத்தின் இந்த செய்கை நமக்கெல்லாம் ஒரு மாதிரி என்றுதான் கூறவேண்டும். யாராவது தன் தாய், தகப்பன், ஜெந்ம தேசம் போன்றவற்றை விட்டு போவார்களா? ஆபிரகாமை தேவன் இவ்விதமாகவே போகச் சொன்னார். ஆபிரகாமோடு கூட அவன் மனைவி சாராளும் தங்கள் இனம், ஜனம் தேசத்தை விட்டு சென்றார்கள். ஆசீர்வதிக்கப்பட்டார்கள். விசுவாசிகளின் பெற்றோர் என அழைக்கப்பட்டார்கள். இவ்விதமாகவே ரூத்தும் ஆசீர்வதிக்கப்பட்டாள். கசப்பு மதுரமானது!

ரூத்தின் தாழ்மையைப் பார்ப்போம். ரூத்தைக் குறித்து போவாஸ், "உன் செய்கைக்குத் தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக;இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான் அதற்கு அவள்: என் ஆண்டவனே, உம்முடைய கண்களில் எனக்குத் தயை கிடைக்கவேண்டும்; நான் உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் சமானமாயிராவிட்டாலும்..." (ரூத்.2:13) என்றாள். தன்னை வேலைக்காரிகளிலும் கீழானவள் என்று தாழ்த்துகிறாள். இதனால் போவாஸின் கண்களில் இவளுக்கு தயை கிடைத்தது. அவனுடைய அப்பமும் அவனுடைய வயலில் கோதுமைக் கதிர்களைப் பொறுக்கிக் கொள்ளும் அனுமதியும் கிடைத்தது. வயலில் தனக்குக் கிடைத்த அப்பத்தைப் புசித்து மீதமுள்ளதை தன் மாமிக்கும் எடுத்துச் சென்றாள். ரூத்தினிடத்தில்



தன்னால் இதைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதைவிட பரிதாபகரமானது வேறெதுவும் இல்லை. ஏனென்றால் அவன் குடிபோதையில் மூழ்கிப்போயிருக்கிறான். சிலர் நல்ல நேரத்தை அநுபவிப்பதற்கேதுவானது என இதைக் கூறுகின்றனர். இதனால் நன்மை என்ன இருக்கிறது?

இங்கே அப்போஸ்தலர் பவுல் கூறுவதைக் கேளுங்கள், அவர் கூறுகையில் "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிகாரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (1கொரி.6:9-10) என்கிறார். தயவு செய்து இங்கே பட்டியலிடப்பட்டுள்ள கெட்டவர்களையும் இழிவான குணமுள்ளவர்களையும் கவனியுங்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய ராஜ்யத்திற்குள் அல்லது தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது என்று பவுல் சொல்லுகிறார். இயற்கையாகவே இப்படிப்பட்ட மக்களும் கூட மனந்திரும்பி, தேவனுக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட இயலும், ஆனால் அவர்கள் தொடர்ந்து செய்யக்கூடாது மேலும் அவர்கள் மரிக்கும்போது கர்த்தருடைய சபைக்குள் அல்லது பரலோகத்திற்குள் நுழைய முடியாது. மதுபானம் அருந்துகிறவர்களும் கூட என்பதையும் கவனியுங்கள். இந்த உலகில் இப்போது யார் மதுபானப் பிரியராக இருக்க விரும்புவார்கள்? நீங்கள் குடிக்கிறவர்களை யாரென அறிவீர்களென்றால் பிறகு குடிகாரர்கள் யார் என்பதையும் அறிவீர்கள். நான் நினைக்கிறேன் நீங்கள் இதை அறிவீர்கள், ஆனால் நீங்கள் இதை அறியவில்லையென்றால் நான் உங்களுக்குச் சொல்லுவேன்.

குடிப்பழக்கமுள்ளவர்கள் போதை தரும் பொருட்களை குடிப்பவர்கள் மேலும் போதை தரும் பொருட்களைக் குடிப்பவர்கள் வழக்கமாக அதிகம் குடிப்பவர்கள் அல்லது அவன் அந்தந்த நேரங்களில் குடிக்கிறவன் மேலும் அவ்வப்போது குடிக்கிற அவன் தொடர்ந்து குடிப்பழக்கத்தையுடையவனாகிறான். இப்போது தொடர்ந்து குடிப்பழக்கத்தையுடையவனாகும் போது அதன்பின் அவன் அதிலிருந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதவனாகிறான். இந்நிலையில் அவன் மரித்து விடக்கூடும் அல்லது சண்டையில் ஈடுபடக்கூடியவனாகிறான் பிறகு யாராவது ஒருவன் அவனைக் கொன்று போடக்கூடியவனாகிறான் அல்லது குடிபோதையில் தொடர்ந்திருக்கிறவன் தெருவை விட்டு வெளியேறவும் அங்கேயிருந்து ஓடிப்போகக் கூடியவனாகவும் மாறுகிறான். அவன் ஒரு கார் வைத்திருப்பவனானால், அவன் காரில் ஏறி வீட்டை நோக்கி ஓட்டிச் செல்ல துவங்கி யார்மேலாவது காரை ஏற்றிவிட்டு ஓடுகிறவனாகக் கூடும். ஒரு குடிப்பழக்கமுள்ளவன் தன் குற்றத்தை ஒத்துக்கொண்டாலும் ஒத்து கொள்ளாவிட்டாலும் பின்பு அவன் கெட்டவனாகவே கருதப்படுவான். என்னுடைய நண்பனே, நீங்கள் ஒரு போதை தரும் பொருட்களை அருந்துபவர்களென்றால் நீங்கள் நிகழக்கூடியதைத் தெரிவிக்கும் ஒரு குடிகாரன். இப்பொழுது குடிப்பழக்கத்திலிருந்து உங்களை எப்படி விடுவித்துக் கொள்வீர்கள்? நீங்கள் போதை பொருட்களை அருந்துவதை விட்டு விலகவேண்டும், நிச்சயமாக, அல்லது அந்த முதல் குடியை நீங்கள் ஒருபோதும் எடுக்க மாட்டீர்கள்.

நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

Evangelizing Our Friends

**எஞ்சியுள்ள ஆவிக்குரியவை உங்களுடைய நண்பர்களுக்கு உதவுகிறது**

Remaining Spiritual Helps Your Friends

**பாடம் -11**



**மனப்பாட வசனம்:**

(கலாத்தியர் 5:6) "பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்"

**முன்னுரை:**

எல்லாரையும் விட மிகச் சிறந்த ஒரு நண்பர் உங்களுக்கு இருக்கிறாரா? உங்களுடைய வயதிற்கேற்றார்போல ஒரு நண்பன்/தோழியாக இருக்கும்படி ஒருவரையும் கொண்டிருக்கவில்லையா? ஒரு வேளை அவன்/அவள் குடும்ப அங்கத்தினரான மூத்தவரோ அல்லது உங்களைவிட இளையவராகவோ இருக்கலாம். நீங்கள் ஒரு சிறந்த நண்பரைக் கொண்டிராவிட்டால் நண்பரைக் கொண்டிராத யாரோ ஒருவரைக் கண்டு பிடியுங்கள், அதன்பின் அந்த நபரை உங்களுடைய சிறந்த நண்பராக்கிக் கொள்ளுங்கள். இது உங்கள் இருவருக்குமே உதவியாக இருக்கும் மேலும் நீங்கள் ஆழமான தனிச்சிறப்பு வாய்ந்த உறவு முறையைக் கொண்டிருக்க இது உங்களுக்கு போதிக்கும்.

மற்றவர்களோடு உறவுகளை வளர்த்துகொள்ளுதல் மிக முக்கியமானது ஏனென்றால்; நாம் உண்மையாகவே ஆவிக்குரியவற்றை இங்கே அப்பியாசப்படுத்திக் கொள்ள முடியும். தேவன் தம்மோடும் மற்றவர்களோடும் உள்ள உறவு முறையில் நாம் வாழ வேண்டுமென விரும்புகிறார். ஆவிக்குரிய வாழ்வு வாழ்வதென்பது அன்பு செலுத்துவதன் மூலம் தேவனையும் மற்றவர்களையும் அறிந்து கொள்ளுகிறோம் எனப் பொருள்படுகிறது. தேவனையும் மற்றவர்களையும் அறிந்து கொள்ளும்போது தேவனையும் பிறனையும் அன்பு செய்வதன் மூலம் மனிதனாய் வாழ்வதற்கான அர்த்தம் இன்னதென்பதை நாம் நிறைவேற்றுகிறோம்.

**வேதாகமம் இது குறித்து என்ன சொல்லுகிறது?**

வேதாகம போதனையின் அடிப்படையில் இன்று தேவன் நம்மோடு பேசுவதன் மூலம் நாம் தேவனோடும் நம்முடைய நண்பரோடும் ஒரு உறவினைக் கொண்டிருப்பதே ஆவிக்குரிய முதிர்ச்சியாகும்.

ஆவிக்குரியவர்களாக இருப்பதற்கு பல வழிகள் உண்டு அவ்வகையான பிரிவுகளில் **தேவனுடைய வார்த்தைக்குச் செவி சாய்ப்பது** என்பது நமது முதல் வழிமுறையாகும். கலாத்தியர் 5:16ல் அப்போஸ்தலனாகிய பவுல், **"பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்" என்றார்**

**இயேசு யோவான்6:63ல் "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" என்றார். பவுல், "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்திலே வரும்"** (ரோமர் 10:17) என்றெழுதினார்.

**விசுவாசம், ஆவிக்குரிய வாழ்விற்கு ஒரு துவக்க நிலையாக இது**



பெண்கள் பகுதி

# கசந்த மாரா மதுரமாகும்

**Bitterness Will Become Sweetness** *-Glory Arjunan*



இப்புத்தாண்டு மதுரமான ஆண்டாக இருக்க வாழ்த்துகிறேன்.

அநேக ஸ்திரீகள் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான நிகழ்வுகளைக் குறித்து அதிகமதிகமாக சிந்தித்து தங்கள் வாழ்க்கையையே கசப்பாக்கிக் கொள்கின்றனர். உங்களுக்கும் கூட கடந்த ஆண்டில் பல கசப்பான அநுபவங்கள் ஏற்பட்டிருக்கலாம். நடந்தது கடந்ததாக இருக்கட்டும். இங்கே தன் வாழ்க்கையில் தனக்கு நேரிட்ட கசப்பினை மதுரமாக்கிக் கொண்ட அந்நிய தேசத்து, அதாவது தேவனை அறியாத மோவாப் தேசத்துப் பெண்ணாகிய ரூத் என்பவளிடமிருந்து நாம் சில பாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

இவள் தன் கணவனை இழந்த பெண்மணி இவளுடைய மாமி நகோமியும் கணவனை இழந்தவளாய் கசப்பான அநுபவத்தினூடே வாழ்ந்தவள். இவள் கூறும்போது, "...நீங்கள் என்னை நகோமி என்று சொல்லாமல், மாராள் என்று சொல்லுங்கள்; சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார்" (ரூத் 1:20) என்று சொன்னாள். இப்பேர்பட்ட கசப்பான சூழ்நிலையில் ரூத்தின் தீர்மானத்தைப் பாருங்கள். தன் மாமியைப் பற்றிக் கொண்டாள் என வாசிக்கிறோம். "...ரூத்தோ அவளை (நாகோயை) விடாமல் பற்றிக்கொண்டாள்" (ரூத் 1:14). அதற்கு நகோமி இதோ உன் சகோதரி தன் ஜனத்தினிடத்திற்கும் தன் தேவர்களிடத்திற்கும் திரும்பிப்போய்விட்டாள் நீயும் திரும்பிப் போ என்றாள். "அதற்கு ரூத் நான் உம்மைப் பின்பற்றால் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து என்னோடே பேச வேண்டாம்; நீ போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்..." (ரூத் 1:16) என்றாள்.

ஒவ்வொரு புத்தாண்டு தினத்தன்றும் கிறிஸ்தவ சகோதரிகள்கூட பல தீர்மானங்களை தேவ சமூகத்தில் எடுப்பார்கள். நாம் அதைச் செய்யவேண்டும், அப்படியிருக்க வேண்டும் என பல பல தீர்மானங்களையும் திட்டங்களையும் வகுப்பர். ஆனால் ஆண்டின் முடிவில் தீர்மானங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டனவா என்றால், அது கேள்விக்குறியாக காணப்படும்.

அநேக ஸ்திரீகள் தங்களது திருமணத்திற்கு முன்பு பல தெய்வங்களை வழிபட்டவர்களாயிருந்து திருமணத்திற்குப்பின் ஜீவனுள்ள மெய்யான தேவனை அறிந்து கொண்டிருப்பார்கள். அதைப்போலவே இந்த ரூத்தும் பல தெய்வங்களை வழிபட்டவளாயிருந்த போதும், தன் வாழ்க்கை கசந்து விட்ட போதும், "உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று உறுதியுடன் கூறுகிறாள். நாமும் ஜீவனுள்ள மெய்யான தேவனைக் கண்டுகொண்டால் அதன் பின் என்ன கஷ்டம் வந்தாலும், அவரையே பற்றிக்கொண்டு அவருடைய ஜனமே நம்முடைய ஜனம் என்று உறுதியுடனிருக்க வேண்டும். இதைவிட்டு, விட்டு என் ஜனம், ஜாதியை எல்லாம் விட்டு விடமுடியுமா என்போமானால், மிகவும் பரிதபிக்கக் கூடியவர்களாய்

1. வயதில் பெரியவன்
2. கண்காணி
3. மேய்ப்பன்

# மூப்பர்களின் தகுதி

## Elder`s Qualification

- P.R.Swamy

இம்மூன்றையும் அப்.20:17,28 வசனங்களில் காண்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1. | 1தீமோ.3:1 | - கண்காணிப்பை விரும்புகிறவன் |
| 2. | 1தீமோ.3:2 | - குற்றஞ்சாட்டப்படாதவன் |
| 3. | 1தீமோ.3:2 | - ஒரே மனைவியை உடைய புருஷன் |
| 4. | 1தீமோ.3:2 | - ஜாக்கிரதையுள்ளவன் |
| 5. | 1தீமோ.3:2 | - தெளிந்த புத்தியுள்ளவன் |
| 6. | 1தீமோ.3:2 | - யோக்கியதையுள்ளவன் |
| 7. | 1தீமோ.3:2 | - அந்நியரை உபசரிக்கிறவன் |
| 8. | 1தீமோ.3:2 | - போதக சமர்த்தன் |
| 9. | 1தீமோ.3:3 | - மதுபானப்பிரியன் - கூடாது |
| 10. | 1தீமோ.3:3 | - அடிக்கிறவன் - கூடாது |
| 11. | 1தீமோ.3:3 | - இழிவான ஆதாயத்தை இச்சிக்கக் கூடாது |
| 12. | 1தீமோ.3:3 | - பொறுமையுள்ளவன் |
| 13. | 1தீமோ.3:3 | - சண்டை பண்ணுகிறவன் - கூடாது |
| 14. | 1தீமோ.3:3 | - பணஆசையுள்ளவன் - கூடாது |
| 15. | 1தீமோ.3:4 | - தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன் |
| 16. | 1தீமோ.3:4 | - தன் பிள்ளைகளை... கீழ்ப்படியப்பண்ணுகிறவன் |
| 17. | 1தீமோ.3:6 | - நூதன சீஷனாக - கூடாது |
| 18. | 1தீமோ.3:7 | - புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவன் |
| 19. | தீத்து 1:6 | - குற்றஞ்சாட்டப்படாதவன் |
| 20. | தீத்து 1:6 | - துன்மார்க்கரென்றும் அடங்காத...பேரெடுக்காதவன் |
| 21. | தீத்து 1:7 | - தன் இஷ்டப்படி செய்யாதவன் |
| 22. | தீத்து 1:7 | - முற்கோபம் - கூடாது |
| 23. | தீத்து 1:8 | - நல்லோர் மேல் பிரியமுள்ளவன் |
| 24. | தீத்து 1:8 | - நீதிமான் |
| 25. | தீத்து 1:8 | - பரிசுத்தவான் |
| 26. | தீத்து 1:8 | - இச்சையடக்கமுள்ளவன் |
| 27. | தீத்து 1:9 | - ஆரோக்கியமான உபதேசத்தி... புத்திசொல்பவன் |
| 28. | 1பேது. 5:2 | - மந்தையை மேய்ப்பவன் |
| 29. | 1பேது. 5:3 | - சுதந்தரத்தை இறுமாப்பாய்... - கூடாது |
| 30. | 1பேது. 5:3 | - மந்தைக்கு மாதிரி |

## உதவிக்காரர்களின் தகுதி

## Deacon`s Qualification




| | | |
|---|---|---|
| 1. | 1தீமோ.3:8 | - நல்லொழுக்கமுள்ளவன் |
| 2. | 1தீமோ.3:8 | - இருநாக்குள்ளவன் - கூடாது |
| 3. | 1தீமோ.3:8 | - மதுபானப்பிரியன் - கூடாது |
| 4. | 1தீமோ.3:8 | - இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாயி - கூடாது |
| 5. | 1தீமோ.3:9 | - விசுவாசத்தின் இரகசி... காத்துக்கொள்ளுகிறவன் |
| 6. | 1தீமோ.3:10 | - முன்னதாக சோதிக்கப்படாதவன் |
| 7. | 1தீமோ.3:10 | - குற்றஞ்சாட்டப்படாதவன் |
| 8. | 1தீமோ.3:11 | - மனைவி நல்லொழுக்கமுள்ளவளாயிருக்கவேண்டும் |
| 9. | 1தீமோ.3:11 | - அவதூறுபண்ணுதல் - கூடாது |
| 10. | 1தீமோ.3:11 | - தெளிந்தபுத்தியுள்ளவள் |
| 11. | 1தீமோ.3:11 | - எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவள் |
| 12. | 1தீமோ.3:12 | - ஒரே மனைவியுடைய புருஷன் |
| 13. | 1தீமோ.3:12 | - குடுப்பத்தை நன்றாய்... நடத்துகிறவர்களுமாய் இருக்க |



**கிறிஸ்துவின் வார்த்தையை கேட்டு விசுவாசிப்பதன்** மூலம் வருகிறது. இவ்வார்த்தைகள் இயேசு சொன்னபடி ஆவியாகவும் ஜீவனைக் கொடுக்கிறதாகவும் இருக்கின்றன. ஆவிக்குரியவர்களாயிருப்பதற்கு நம்வாழ்வில் கிறிஸ்துவின் வசனங்களின் மேல் நமது விசுவாசத்தை வைக்கவேண்டும். நாம் இதைச் செய்யும்போது ஆவிக்குரியவற்றால் நடத்தப்படுவோம், மாம்சத்தின் இச்சைகளின்படி அல்ல. ஆவிக்குரியவர்களாயிருக்கிற தனிப்பட்ட ஒவ்வொருவரையும் தேவன் தம்மை ஆராதிக்கும்படி விரும்புகிறார். யோவான் 4:23 "உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்கலாம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர் களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்" எனச் சொல்லுகிறது. ஆம், இயற்கையில் தேவன் நம்மோடு ஒரு ஆவிக்குரிய உறவினை ஏற்படுத்த விரும்புகிறார், இது நாம் அவருடைய வார்த்தையை அறிந்து, விசுவாசித்து அதன்படி நடக்கவேண்டும் என்று பொருள்படுகிறது.

தேவன் தம்முடைய வசனத்தின் மூலம் நம்மிடம் பேசுகையில், நாம் அவருடன் ஜெபத்தில் பேசுகிறோம். இது ஆவிக்குரிய வாழ்க்கை வாழ்வதற்கான இரண்டாவது நிலையாகும். அப்போஸ்தலனாகிய பவுல் 1தெசலோனிக்கேயர் 5:17ல் **"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்"** என்றார். இயேசு பிதாவாகிய தேவனை நோக்கி ஜெபம் பண்ணவேண்டிய விதத்தைக் குறித்து மத்தேயு 6:9ல் சொன்னார். அவர் அவ்வாறு சொன்னபோது; **"நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக"** என்றார். கொலோசெயர் 3:17ன்படி நாம் இந்த ஜெபங்களை இயேசுவின் மூலம் ஏறெடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்: **"வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்"** தேவனிடத்தில் பேசுவதன் மூலம் எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானத்தைப் பெறுகிறோம். பவுல். **"நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்"** (பிலி.4:6-7) என எழுதியுள்ளார். ஆவிக்குரியவர்களாய் இருப்பதன் பொருள். ஆவியினால் நடத்தப்படுவதற்கிணங்க மற்ற மக்களோடு உறவு கொண்டிருத்தல் என்பதாகும். ஆவிக்குரிய வாழ்க்கை வாழ்வதற்கான மூன்றாவது நிலையாகும். ஒரு ஆவிக்குரிய நபர் ஆவிக்குரிய தனித்தன்மையை சாத்தியமாக்க நாடுவான், சரீரத்தின் மாம்ச இச்சைகளை வெறுப்பான். இதன் அர்த்தம் ஆவிக்குரிய கனிகளை அப்பியாசப்படுத்துவதாகும். பவுல் காலத்தியர் 5:22,23ல் இவைகளைப் பட்டியலிடுகிறார்; **"ஆவின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை"**

ஆவிக்குரிய வகையில் இருத்தல் என்பதற்கான மையப் பொருளாக இங்கே காணப்படுகிறது.

- தொடரும்

பெண்கள் பகுதி

# நன்றியுள்ளவளாயிரு
## Be Ye Thankful

-Betty



ஒருவரும் நன்றியற்ற தன்மையை புகழ்வதில்லை. வேதவாக்கியங்களும், தேவனும் கூட நாம் நன்றியுள்ள மக்களாக இருக்க தேவன் விரும்புகிறார் என சுட்டிக்காட்டுகிறது. உண்மையில் அவர் நமக்கு செய்திருக்கிற எல்லாவற்றிற்காகவும் நமது நன்றியினை அவரிடம் வெளிப்படுத்த நமக்குக் கட்டளையிடுகிறார். சில வசனங்களை நாம் வாசிப்போம்.

“தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படிக்கு, இவையெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டா யிருக்கிறது” (2கொரி.4:15).

“இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர், தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்” (2கொரி.9:12).

“நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்” (பிலி.4:6).

2கொரி.4:15 தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும் எனக் கூறுகிறது. எவ்வாறு நன்றியறிதலானது தேவனுடைய கிருபையின் பெருக்கத்தோடு இணைக்கப்பட்டுள்ளது?

2கொரி.9:12 தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே பரிசுத்தவான்களின் குறைவுகளை நீக்குவதற்கு சம்பூரண பலனுள்ளதாக இருக்கிறது எனக் கூறுகிறது.

பிலிப்பியர்6:4 தேவனிடத்திற்கு தெரியப்படுத்துகிற நமது ஜெபங்களுக்கும் விண்ணப்பங்களுக்குமிடையே இருக்கிறது ஸ்தோத்திரம் எனக்கூறுகிறது.

ஏன் தேவன் மிகக் குறிப்பாக ஸ்தோத்திரம் செய்தலை ஊக்கப்படுத்துகிறார்? மேலும் அந்த செயல்பாடானது எவ்வாறாக அவர் நம்மிடம் காண்பிக்கிற கிருபையின் பெருக்கத்தை உண்டாக்குகிறது?

நமது இதயம் கெட்ட குழந்தைகளைப் போல தேவன் ஏற்கனவே செய்து முடித்திருக்கிறவற்றிற்கு ஒரு போதும் நன்றி கூறாமல் மேலும் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தால் நாம் தேவனைப் பிரியப்படுத்தமுடியாது. ஆனால் உமக்கு நன்றி என்று கூறுவதற்கு மேலாக தேவன் பன்மடங்கு அதிகமாக செயல்படுகிறார் என நான் நினைக்கிறேன்.

எத்தனை முறை சிலவற்றிற்காக நாம் ஜெபித்து அதைப் பெற்றுக்கொண்டு அதன் பின் முதல் ஜெபத்திற்கு பதில் கிடைக்கப்பெற்றதை நாம் மறந்து மீண்டும் வேறொரு காரியத்திற்காக ஜெபிப்பதில் ஆர்வமுள்ளவர்களாய் இருந்திருக்கிறோம். நீங்கள் சாலைப் பிரயாணப் பாதுகாப்பிற்காக பிரயாணத்தை ஜெபத்துடன் ஆரம்பித்து அதன்பின் உங்களுடைய உரிய இடத்தை நீங்கள் அடைந்தபோது பாதுகாப்பாக நீங்கள் போய் சேர்ந்து விட்டீர்கள் என்பதை நினைப்பதற்கு எப்போதாவது தவறியிருக்கிறீர்களா? அடிக்கடி நாம் ஒரு தேவைக்காக ஜெபித்துவிட்டு, மற்றொன்றிற்குக் கடந்து செல்கின்றோமே தவிர, பதிலளிக்கப்பட்ட ஜெபத்தை எண்ணிப்பார்க்காமல் தொடர்ந்து கேட்டு, கேட்டு தேவன் நமது ஜெபங்களை எப்போதும் கேட்டுக்கொண்டேயிருக்கிறார் என்பது பற்றி நாம் நமக்குள்ளே சந்தேகம் கொள்கிறோம்.



நாம் நிறுத்தி நிதானமாக விண்ணப்பித்துள்ள குறிப்பிட்ட விண்ணப்பங்களில், நாம் பெற்றுள்ள குறிப்பிட்ட பதில்களை எண்ணிப்பார்த்து அதன்பின் கிடைத்த பதில்கள் ஒவ்வொன்றிற்காக வார்த்தைகளில் நன்றி கூறுதலோடு அடுத்த விண்ணப்பங்களை முன்வைப்போமானால் நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்துவதில் அது எப்பேர்பட்ட ஔஷதமாயிருக்கும்!

முந்தையநாட்களில் உதவினதும் பராமரித்ததுமான உண்மையான ஒவ்வொன்றையும் நன்றிகூறுதலில் பட்டியலிடுவோமென்றால், நம்மை பாதுகாக்கின்ற தேவனில் மகா பெரிதான விசுவாசத்தையும், தேவையான வழிநடத்துதலையும் அவர் கொடுப்பார் என மகா பெரிதான நம்பிக்கையையும், அவருடைய அநாதி அன்பின் மேல் பெரியதான உறுதியையும் பெற்றிருக்க மாட்டோமா?

அவ்வாறே நேற்று அன்புகூர்ந்து, நமக்கு செவிகொடுத்த தேவன் இன்றும் கூட நேசித்து நமக்குச் செவிகொடுப்பார் என்ற மிகுந்த உறுதியோடு மகாபெரிய விசுவாசத்தில் நாம் ஜெபிப்போம். நாம் 1யோவா.5:14,15-ல் யோவான் வெளிப்படுத்தியதை அறிந்து கொள்வோம். “நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக்கேட்டாலும், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். யோவான் ஜெபித்தபோதே ஏற்கனவே தன்னுடைய கையில் பதிலை அவன் பெற்றிருந்தது போல அவனுடைய நம்பிக்கை மிகப் பெரியதாயிருந்தது. “நாம் பெற்றுக்கொண்டோமென்று நாம் அறிந்திருக்கிறோம்....” முந்தைய பதில்களுக்கு நன்றியுள்ளவர்களாயிருத்தல், அதே நம்பிக்கையுடன் கூட ஜெபிப்பதற்கு நம்மை பெலப்படுத்துகிறது. வருத்தம் என்னவென்றால், கிறிஸ்தவர்களுடைய பல நல்ல ஜெபங்களுக்குப் பதில் ‘இல்லை’ என்பதேயாகும். ‘இல்லை’என்ற அந்த பதில் தங்களுக்கு தங்களால் கொடுக்கப்பட்டது ஏனென்றால் அவர்கள் ஒருபோதும் பதிலளிக்க தேவனுக்கு வாய்ப்பளிக்கவில்லை.

அது எவ்வாறு இருந்தது? யாக்கோபு1:5-7-ல் கூறுகிறார் “உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்: சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக”.

தேவன் கேட்பாரோ என்ற சந்தேகம், மிகுதியான ஜெபத்தை வீணாக்கியிருக்கிறது. சந்தேகத்தை முறியடிப்பதற்கு நாம் கொண்டிருக்கிற ஒரு ஆயுதமானது, நமது வாழ்க்கையை திரும்பிப்பார்த்து தேவனுடைய முந்தைய நாளின் பராமரிப்பையும் ஜெபங்களுக்கான பதில்களையும் எண்ணிப்பார்ப்பதுமே ஆகும். நாம் நிறுத்தி நிதானித்து அதன்பின் நமது குற்றங்களை வார்த்தையினால் அறிக்கையிட்டு நமது வாழ்வில் நடந்த அனைத்து நிகழ்ச்சிகளும் உண்மையாகவே தேவனுடைய செயல் (யதார்த்தமாக நிகழும் அல்லது நடைபெறும் ஒன்று அல்ல) என்றும், அவருக்கு நன்றி செலுத்துவதன் மூலம் அவருடைய கவனமுள்ள பராமரிப்புக்கு நாம் காணிக்கை செலுத்துகையில் அச்செயலே அவர் இன்னும் செவிகொடுக்கிறார் என்றும், நமக்கு உதவும்படி காத்திருப்பார் என்றும் எண்ணும்படி நம்முடைய விசுவாசத்தைப் பெலப்படுத்துகிறது.

எனவே நன்றியுடனிருப்பது போதுமான விசுவாசத்தைப் பெற்றிருப்பதற்கு நம்மை பெலப்படுத்துகிறது. மறுபுறம் நம்முடைய வாழ்வில் நமது நன்மைக்கென்று செயல்பட தேவனை தடையின்றி அனுமதிக்கவும் செய்கிறது. அவருடைய உதவிக்காகவும், அவருடைய சுயவிருப்பங்கள் நமக்கு உதவும்படிக்கு எல்லாவற்றையும் சாதகமாக்கவும் அவருடைய கட்டளைகள் நமது வாஞ்சைகளை எவ்வளவு அழகாய் இணைக்கின்றது!